

சென்னை மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ் தந்தையார் பலராமன் இயற்கை எய்தியதையொட்டி, திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) நேரில் சென்று, திருவுடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் கழக செயலாளர்கள் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், எம்.மதன்மோகன், இளைஞரணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், க.பிரபு, கு.பி.ராஜா, அன்பகம் செந்தில், கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# மகாகவி பாரதியார் 144- வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர்கள் இன்று மாலை அணிவிக்கின்றனர்!

சென்னை, டிச. 11- மகாகவி பாரதியார் அவர்களின் 144வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (11.12.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மகாகவி பாரதியார், 11.12.1882 அன்று தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில், சின்னசாமி ஐயர் - இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப் புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு, "பாரதி" என்று பட்டம் வழங்கினார். நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கிய வாதியாகவும் திகழ்ந்த இவர், "மகாகவி" எனப் போற்றப்படுகிறார். தந்தை இறந்த பிறகு சில காலம் பாரதியார் காசியில் தம் அத்தை வீட்டில் வளர்ந்தார். பின்னர், தமிழ்நாடு திரும்பினார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். எனவே தான், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமையை உலகறியப் புகழ்ந்து பாடினார்.

மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை, "சுதேசமித்திரன்" பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு, "இந்தியா" என்ற வார இதழையும், "பாலபாரதம்" என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

"கண்ணன் பாட்டு", "குயில் பாட்டு", "பாஞ்சாலி சபதம்" போன்ற காவியங்களைப் படைத்தார். கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகியும், தமிழ்ச் சுதந்திரத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவற்றைப் படிப்பவர் உள்ளத்தை ஈர்த்து உயிரோட்டமாய் உலவும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மகாகவி பாரதியார் அவர்களை "மக்கள் கவி" என்று போற்றினார். மகாகவி பாரதியார் அவர்களின் பாடல்கள் மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டியதால் ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்ய முயன்றது. ஆனால், பாரதியார் ரயில் மூலம் தப்பி பிரெஞ்சு நாட்டு ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி சென்று வாழ்ந்தார். பின்னர், சென்னை, திருவல்லிக்கேணியில் வசித்து வந்த அவர் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது கொண்டாடப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, 1968 ஜனவரி இரண்டாம் நாள் அன்று சென்னை கடற்கரையில் திறந்து வைக்கப்பட்ட 10 தமிழ்ச் சான்றோர்களின் சிலைகளில் மகாகவி பாரதியார் அவர்களின் சிலையும் திறந்து வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில், 12.5.1973 அன்று அரசுடைமையாக்கி அதனை நினைவு இல்லமாக மேம்படுத்தித் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகச் செப்டம்பர் 11 ஆம் நாள் ஆண்டுதோறும் மகாகவி நாள் - எனக் கடைப்பிடிக்கப்படும் என 10.9.2021 அன்று அறிவித்து; 14 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றுள் பாரதி இளம் கவிஞர் விருது, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைப் புத்தகமாக வெளியிடுதல், காசியில் அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் பராமரிக்கப் பட நிதியுதவி வழங்குதல், பாரதியார் படைப்புகளை நாடகங்களாகவும், குறும்படங்களாகவும் வெளியிடுதல் முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மகாகவி பாரதியார் பிறந்த நாளான, டிசம்பர் 11ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகத் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் மகாகவி பாரதியார் பிறந்த நாளான இன்று (11.12.2025) காலை 9.30 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், சென்னை கடற்கரை, காமராசர் சாலையில் உள்ள பாரதியார் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

# 8-வது ஊதியக்குழு செயல்படுத்தும் தேதியை தெளிவுபடுத்துங்கள்!

## ஒன்றிய நிதி அமைச்சரிடம் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை மனு!

புதுடெல்லி, டிச. 11 - அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தியுள்ள 8-வது ஊதியக்குழு குறித்து ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என தென்சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.



டெல்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமனைச் சந்தித்து, எழுத்து மூலமான மனுவை அளித்தார். அந்த மனுவில்,

"8-வது ஊதியக்குழு எப்போது அமைக்கப்படும்? அதன் அமல்படுத்தும் காலக்கெடு குறித்து இதுவரை எந்தத் தெளிவான அறிவிப்பும் இல்லை. இதனால் அரசு ஊழியர்களும், குறிப்பாக ஓய்வூதியதாரர்களும் கவலை வெளிப்படுத்துகின்றனர்.

சென்னை ஓய்வூதியர் சங்க பிரதிநிதிகள் என்னை நேரில் சந்தித்து, 'திருத்தப்பட்ட ஓய்வூதியப் பலன்கள் முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கும் வழங்கப்படுமா?' என்ற ஐயப்பாட்டை முன்வைத்தனர். முன் நடைமுறைகளைப் போலவே, திருத்தப்பட்ட ஊதிய அளவீடுகள் ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்படும் என உறுதியளிக்க வேண்டும்.

ஊதிய திருத்தம் குறித்த அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை ஒன்றிய அரசு உடனடியாக வெளியிட்டு, ஓய்வூதியதாரர்களிடையே நிலவும் பதட்டம் மற்றும் குழப்பத்தைத் தணிக்க வேண்டுகிறேன்" என தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

மனுவைப் பெற்ற மத்திய நிதி அமைச்சர், இதுகுறித்து உரிய துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப் படும் என உறுதியளித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த 8-வது ஊதியக்குழு அறிவிப்பை எதிர்நோக்கும் நிலையில், எம்.பி. வழங்கிய இந்த கோரிக்கை பணியாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி எண். 350ல்

# 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பரப்புரை!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், டிச 11; தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற பரப்புரையை திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்கு சாவடி எண் 350 ல் மாவட்ட கழக செயலாளர் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் துவக்கி வைத்து பரப்புரையை மேற்கொண்டார்

அப்போது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற பரப்புரையின்போது பொது மக்களால் வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றி தர உறுதி அளித்தார்கள்

இதனை தொடர்ந்து பேசிய அவர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் பேசும்போது,

2 கோடியே 16 லட்சம் பெண்களில் ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

சொன்னதையும் மட்டுமல்லாமல்சொல்லாத திட்டமான பேருந்தில் பெண்கள் இலவசமாக செல்ல எதுவாக விடியல் பயணம் திட்டத்தையும் கொண்டு வந்தவர் என தெரிவித்தார்.

மேலும் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பெற்றவர்களிடம் எதுவும் கேட்காமல் இருப்பதற்காக

ஆயிரம் உதவித்தொகை வழங்கி வருகிறார். 1ஆம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு திட்டத்தை கொண்டு வந்து ஏழை எளிய மாணவ மாணவிகள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்ற அரிய திட்டத்தையும் தமிழக முதல்வர் கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

ஆவடியில் மிகப்பெரிய திட்டமான அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டதும் மிகப்பெரிய சாதனையாகும்.

அதேபோல் இரண்டு கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையமும், டைட்டில் பார்க்கையும் முதலமைச்சர் திறந்து வைத்தார் அதேபோல் சேக்காடு பகுதியில் மேம்பாலமும்,

அதேபோல் மெட்ரோ ரயில் திட்டத்தை பூந்தமல்லி வரை கொண்டு வந்ததும் நமது ஆட்சி காலத்தில் தான் என்றும், இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல்வர் 68 ஆயிரம் பேருக்கு பட்டாவும், இந்த மாதம் 38 ஆயிரம் பேருக்கும் பட்டாவும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார் சொன்னதையும் சொல்லாததையும் செய்தவர் நமது முதல்வர் என்றும் பெருமிதம் தெரிவித்தார்.

அதேபோல் உங்களது குறைகளை தெரிவித்தால் அதனை உடனடியாக நிறைவேற்றி தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்றும் தெரிவித்தார் திமுக ஆட்சி தொடர்ந்து நீடிக்க அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து சொல்லி வாக்கு சேகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இதில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், சி. ஜெரால்டு, நாகூர் கனி, வழக்கறிஞர் பெ.வினோத், பிரவீன் குமார், செந்தில் மற்றும் BLA2 மற்றும் BLC உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கிழக்கு தாம்பரம் அரசு உதவி பெறும் தாம்பரம் மிசிநிமால் புக் ராஜ் போரா மகளிர் மேல்நிலை பள்ளியில் பயிலும் 240 பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா வழங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி 5,வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், வட்ட செயலாளர் வி. முனுசாமி,மாமன்ற உறுப்பினர்கள்.சசிகலா கார்த்தி.ரமணிஆதி மூலம், பகுதி கழக நிர்வாகிகள் பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவிகள் உடன் இருந்தார்கள்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 30வது வார்டுக்கு உட்பட்ட துர்கா நகரில் புதிய அங்கன்வாடி மையம் ரூபாய் 19லட்சத்தில் 2024 கல்வி நிதியின் மூலம் கட்டப்பட்டது.இக்கட்டிடத்தை மாமன்ற உறுப்பினரும், துணை மேயருமான கோ.காமராஜ் திறந்து வைத்தார். உடன் பம்மல்வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், அவை தலைவர் கே.சந்திரன், துணைச் செயலாளர் ஆர்.ஸ்ரீதர், மற்றும் ஏராளமான கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசு மாநிலங்களைக் கைகாட்டும் தந்திரம் கூடாது!

# பெண் ரெயில் பயணிகளின் பாதுகாப்பில் அலட்சியம் ஏன்?

## நாடாளுமன்றத்தில் — ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச.11- பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கான திட்டங்களை உருவாக்குவதில் அலட்சியம் காட்டும் ஒன்றிய அரசு தனது இயலாமையை திசைதிருப்ப 'லாஜிக்' இல்லாமல் மாநிலங்களை கைகாட்டும் தந்திரம் என்றும் ரயில்வே அமைச்சரின் பதிலுக்கு எம்.பி. கே.இ.பிரகாஷ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



24 மணி நேரத்திற்கும் மேலாக தனியாக ரயிலில் பயணிக்கும் பெண்களுக்காக செயல்படுத்தி வரும் பாதுகாப்பு திட்டங்கள் குறித்து, ரயில்வே அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு அதிகாரம் யார் கையில் இ இருக்கிறது என்பதையே உணராமல் பொறுப்பற்ற பதில் அளித்திருக்கிறார் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

அவரது பதிலில் இருந்து, பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்பு மீது ஒன்றிய அரசு கொண்டிருக்கும் அலட்சியம், திட்டங்களை உருவாக்குவதில் பலமடங்கு பின்தங்கியிருப்பது, நிர்பயா நிதியையும் சரியாக பயன்படுத்தாது ஆகியவை அம்பலமாகியுள்ளன.

**லாஜிக் இல்லாமல் மாநில அரசை கைகாட்டும் தந்திரம்!**

24 மணி நேரத்திற்கும் மேலாக தனியாக ரயிலில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்புக்காக ரயில்வே அமைச்சகம் உருவாக்கியுள்ள 'Mechanism' என்ன என்பதே எனது கேள்வி. இதற்கு, சட்டம் ஒழுங்கு மாநில அரசின் கீழ் வருவதால், ஒன்றிய அரசு நேரடியாக பொறுப்பேற்காது என்று அமைச்சர் பதிலளித்துள்ளார். இதை விட அமைச்சர் பதவியில் இருக்கும் ஒருவர், நாடாளுமன்றத்தில் பதில் அளிக்க முடியுமா எனத் தெரியவில்லை.

ரயில்வே, முற்றிலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறை. இதற்கான கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசின் வசமே உள்ளது. இதோடு, RPF மூலம் களத்தில் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதிலும் ஒன்றிய அரசுக்கு பொறுப்பு உண்டு.

'மேரி சஹேலி' சோதனைத் திட்டமாகவே இயங்குகிறது; நாடு முழுக்க பயன்பாட்டில் இல்லை:

500 பெண் RPF அதிகாரிகளை மட்டும் கொண்ட 'மேரி சஹேலி' திட்டம் 'வெற்றிகரமாகச்' செயல்படுவதாகவும், நாளொன்றுக்குக்கு சராசரியாக ரயில்களில் சுமார் 250 RPF குழுக்கள் பணியமர்த்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் மூலம், பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது என்பதே அமைச்சர் உணர்த்துவது.

இந்திய ரயில்வேயில் நாளொன்றுக்குச் சுமார் 13,000க்கும் மேற்பட்ட பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதில், வெறும் 500 ரயில்களுக்கு மட்டும் 'மேரி சஹேலி' திட்டம் செயல்படுத்தப்படுவதாகக் கூறுவது, அலட்சியமான, உண்மையை மறைக்கும் பதில்.

மொத்த ரயில்களில் 4% க்கும் குறைவான ரயில்களில் செயல்படும் திட்டம் முழுமையானது அல்ல, அது ஒரு 'சோதனைத் திட்டம் (Pilot Project)' மட்டுமே. இதை விரிவுபடுத்துவது குறித்தும் அமைச்சர் பதிலில் எதுவும் குறிப்பிடவில்லை.

புதிய தொழில்நுட்பங்களுக்கு முன்னேற முயலாத அல்லது இயலாத, காலாவதி மனநிலை:

'Travel Check Calls' A 'Digital Alert Systems' போன்ற நவீன பாதுகாப்பு அமைப்புகள் அறிமுகப்படுத்தப்படுமா என்ற கேள்விக்கு, நேரடியாக பதில் அளிக்காமல் அமைச்சர் தவிர்த்திருக்கிறார். இதற்கான சமாளிப்பாக, ஏற்கெனவே உள்ள 139 அவசர உதவி எண், சிசிடிவி கேமிராக்கள் மற்றும் 'மேரி சஹேலி' ஆகியவற்றையே, எண்களை இட்டு பட்டியலிட்டிருக்கிறார்.

உலகின் பல நாடுகளில் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அதிநவீன கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த எச்சரிக்கை அமைப்புகள் (AIbased alerts) பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் பேருந்துகளிலேயே அந்த எச்சரிக்கை அமைப்புகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மாநில அரசு அமல்படுத்திவிட்டது.

ஆனால், உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான இந்திய ரயில்வேயின் அமைச்சர், தொலைபேசி உதவி எண்கள், சிசிடிவி கேமிராக்களையே பட்டியலிடுகிறார்.

நிர்பயா நிதி வெறுமனே டேப்லெட்டுகள் வாங்குவதற்காக இல்லை

'மேரி சஹேலி' குழுக்களுக்கு நிர்பயா நிதியில் இருந்து டேப்லெட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறார். மேலும், ரயில் நிலையங்களில் சிசிடிவி நிறுவவும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறியிருக்கிறார்.

'நிர்பயா நிதி' என்பது பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கப் பரந்த அளவிலான, நிரந்தர உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி. வெறும் சில டேப்லெட்டுகளை வாங்கியதையே நிதியைப் பயன்படுத்தியதற்கான ஆதாரமாகக் காட்டுவது ஏற்புடையதாக இல்லை.

புதிய, விரிவான, நிரந்தரப் பாதுகாப்பு அமைப்புகளை அமைப்பதற்கு நிர்பயா நிதியை ரயில்வே பயன்படுத்த வேண்டும். மேலும், இந்த நிதி குறித்த முழு வெளிப்படைத்தன்மையை கடைப்பிடிக்க வேண்டும். இது கட்டாயம்.

வெற்று விளம்பரங்கள் மற்றும் பெயரளவு திட்டங்களின் பின்னால் மறைந்து கொள்ளாமல், பெண் பயணிகளின் பாதுகாப்பிற்கான கடமையையும் அதிகாரத்தையும் உணர்ந்து ரயில்வே துறை செயல்பட வேண்டும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெண் பயணிகளின் பாதுகாப்பு அமைப்புகளை பலமடங்கு வலுவாக்கி, அவர்கள் அச்சமின்றி பயணிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் தண்டபாணி தட்டி விநாயகர் தெரு, நியூ காலனி துரோபதி அம்மன் கோவில் தெரு, சுப்பிரமணியன் தெரு ஆகிய தெருக்களில் டிட்வா புயல் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளரும், 177வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல்பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் பால்வடிகளை வழங்கினார். உடன் பத்மராஜ், யோகா மணிமாறன், மேகநாதன், எஸ்.தனுஷ் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.